**செய்தி வெளியீடு எண். 122** **நாள். 28.02.2018**

**மதுப்பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சார்பாக மதுப்பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (28.02.2018) கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதவது :

திருவள்ளூர் மாவட்டத்தில் மதுபானம் மற்றும் கள்ளச்சாராயம் அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு பொதுமக்களிடையே ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக காந்தி சமுதாயக் கல்லூரியைச் சேர்ந்த 200 மாணவிகள் மற்றும் டீரிம் இந்தியா ஐ.டி.ஐ.-யைச் சேர்ந்த 300 மாணவர்கள் ஆக மொத்தம் 500-க்கும் மேற்ப்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்பேரணி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தொடங்கி திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நிறைவடைந்தது. பேரணியில் கலந்துக்கொண்ட மாணவர்கள் மதுபழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு பலகைகளை ஏந்தி, வழிநெடுகிலும் மதுபழக்கத்திற்கு எதிரான கோஷங்களை எழுப்பிச் சென்றனர். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இப்பேரணியில் திருவள்ளூர் மாவட்ட உதவி ஆணையர் (கலால்) திரு.எஸ்.சுரேஷ்குமார், திருவள்ளூர் மதுவிலக்கு மற்றும் அமல் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.பி.ராஜேந்திரன், டாஸ்மாக் மாவட்ட மேலாளர் (மேற்கு) திரு.எ.ஜி.ராஜராஜன், டாஸ்மாக் மாவட்ட மேலாளர் (கிழக்கு) திரு.ஆர்.சத்யன், திருவள்ளூர் வட்டாட்சியர் திரு.எம்.ஆர்.தமிழ்செல்வன், அரசு அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**